1975 மார்ச் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யூனியன் பணமே தேவையில்லை என்று சொல்லிவிட்டாரே.

திரு. பூ. எட்டியப்பன் : ஊராட்சி ஒன்றியங்கள் பணம் தந்தால் முதலிடம் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முதலிடம் எதற்கும் கொடுக்கப்படுவதில்லை. எல்லா இடங்களுக்கும் அவசியம் என்பதால்தான் இந்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறது.

திரு. ந. சோமசுந்தரம் : அமைச்சர் அவர்கள், இணைப்புச் சாலை வேலையைப் பெருவழித் துறையிடம் விடுவதாகக் கூறினார்கள். இப்போது அந்தந்தக் கிராமங்களில் உள்ள சாலைகள் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஊராட்சிகளுக்கும் சொந்தமாக இருக்கின்றன, பெருவழித்துறை எடுத்து கொள்ள காலதாமதம் ஆகும், ஆகவே அதைத் தவிர்ப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : போடுவதற்குத்தான் பெருவழித்துறையிடம் கொடுக்கிறோம், சாசனமாக அவர்களிடம் கொடுத்து விடப் போவதில்லை. ரோடுபோடுகிற வேலையை பெருவழித்துறையினர் அவர்களாகவே செய்துவிடுவார்கள்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த பேர் வெதர் ரோட்ஸ் திட்டம் நம்முடைய அரசாங்கத்தின் வரப்பிரசாதமாகும். நம்முடைய அரசாங்கத்திலே 3 கிலோ மீட்டர் அல்லது அதற்குட்பட்டவைதான் முதலிலே எடுத்துக்கொள்ளப்படும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எந்த எந்த ஊர்களுக்கு இணைப்புச் சாலைகள் தேவை என்று மொத்தமாகக் கணக்கெடுத்து மத்திய அரசோடு போராடி இதற்காக நிதியைப்பெற்று இணைப்புச் சாலைகள் எல்லாவற்றையும் சீக்கிரமாக எடுத்து முடிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : எங்கெங்கே எல்லாம் அவசியமோ அங்கேயெல்லாம் சேர்த்திருக்கிறோம். இதற்காகத் தனிவிதி முறைகள் இல்லை. எல்லாம் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன.

புதுப்பாளையம்—எருக்குவாய்க்கண்டிகை சாலை.

*333 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், புதுப்பாளையம் கிராமத்திலுள்ள எருக்குவாய்க்கண்டிகை செல்லும் பாதையில், சுண்ணும்புக் கால்வாயின் மேல் அமையும் சிறுபாலத் திட்டம் காலதாமதம் ஆவதேன் ?

(இ) அது எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே,

(அ) ஊராட்சி கொடுக்க வேண்டிய பங்குத் தொகையினைச் செலுத்த தாமதித்ததால் பால வேலையில் தாமதம் ஏற்பட்டது.

(இ) தற்போது பால வேலை நடந்து வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்தச் சிறு பாலத்தைக் கட்டுவதன் மூலம் பல ஊர்களுக்கு இணைப்பு ஏற்படுத்த முடியும். எனவே ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள்ளாக இதை முடிக்க வேண்டுமென்று ஒரு தனி ஆணை பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, வேலை நடந்து கொண்டிருக்கிறது, 16,500 ரூபாய்க்கு டெண்டர் விடப்பட்டு 3,163 ரூபாய் அளவிலே நேற்றுவரையில் வேலை நடந்திருக்கிறது. ஆகவே, இன்னும் சில தினங்களிலே இந்த வேலை முடிந்துவிடும்.

*Diamond Jubilee Arch in Thanjavur.*

*334 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) Whether the Thanjavur Municipal Council had passed a resolution on January 24, 1974 requesting the Government to demolish the Diamond Jubilee Coronation Arch constructed during 1911 toc ommemorate the Coronation of King George-V ; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) அண்டு (இ) தஞ்சாவூரில் மணிக்கூண்டுக்கு அருகில் உள்ள மன்னர் முடிசூட்டு வைர விழா நினைவு வளைவு, பாதசாரிகள் வண்டிகள் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதால் அதை இடித்துவிடவேண்டும் என்று தஞ்சாவூர் நகராட்சி மன்றம் 1974-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் நாளிட்ட தனது 193-ஆவது தீர்மானத்தில் முடிவு செய்தது. தஞ்சை நகராட்சி மன்றத்தின் வேண்டுகோள் அரசால் ஏற்கப்படவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தத் தீர்மானம் ஏற்கப்படாததற்கு ஏதாவது காரணம் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா ? பழங்கால மன்னர்களின் நினைவாக அது இருந்தாலும்கூட வருங்கால மக்களுக்கு வரலாற்றை எடுத்துக்காட்டுவதாக அவைகள் இருக்க ஏதாவது புது உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.